# Peace Still a Long Way from Govt. Ceasefire With Tigers

இலங்கை:

## விடுதலைப்புலிகளுடனான அரசாங்கத்தின் யுத்தநிறுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் இடையே தோன்றியுள்ள நீண்ட இடைவெளி

மார்வான் மாக்கான்-மார்கார் -

யாழ்ப்பாணம், இலங்கை, பெப்ரவரி 23 (ஐபிஎஸ்)- இலங்கையின் இரண்டு வருடகால இனப்பிரச்சினையின் கேந்திர ஸ்தானமாக விளங்கும் யாழ்ப்பாண நகரில் பொழுது மறைந்து இருள ஆரம்பித்ததும் தற்போதய சமாதான காலத்தில் வாழ்க்கையின் பசுமையான நினைவுகள் எழுகின்றன.

முன்னர் யுத்தகாலத்ததில், மின்சாரம் துண்டிக்கப்பட்டு அநேகமாக இரவு வேளைகள் கும்மிருட்டிலேயே கழிந்த காலம் போய் தற்போது வீடுகளிலும் கடைகளிலும் அதிகரித்துவரும் வாடிவீடுகளிலும் மின் விளக்குகள் பிரகாசமாக எரிந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது.

மாலையாகி இருட்டிய பின்னரும் மக்கள் சைக்கிள்களில் சாரிசாரியாக வீதிகளில் செல்கிறார்கள். குழுக்களாகவோ தனியாகவோ மனநிம்மதியுடனும் பதட்டமின்றியும் அவர்கள் உல்லாசமாக சவாரி செய்வதை அவதானிக்க கூடியதாகவும் இருக்கிறது. ஆனால், சிவில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் இரவுநேர ஊரடங்குகள், அரசாங்க படயினரின் சோதனை நிலையங்களில் அடிக்கடி நடத்தப்படும் சோதனைகள் போன்றவற்றினால் சைக்கிள்களில் செல்வோர் பெரும் அசௌகரியங்களுக்கும் துன்புறுத்தல்களுக்கும் உள்ளானார்கள்.

ஆனால், அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தி அடைந்துள்ள இவ்வேளையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதை அடுத்து ஏற்பட்ட பசுமை நினைவுகள் கலைய ஆரம்பித்துள்ளன.

வடஇலங்கை நகரான யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் முன்னணித் தமிழ் தினசரியான உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.வி. கானமயில்நாதன் தற்போதய யாழ்ப்பாண நிலைமை குறித்து அவரது அலுவலகத்திலிருந்வாறு அளித் பேட்டியின் போது, 'யுத்தநிறுத்தம் நீடிக்குமா என்பது குறித்து மக்கள் மத்தியில் சந்தேகங்கள் எழுந்துள்ளன' என்று கூறினார். சுனாமியினால் அழிவுற்ற வடக்கு கிழக்கு பிரதேசங்களை மீளக்கட்டி எழுப்புவதற்கு பொருத்தமான ஒரு திட்டத்தை தயாரிப்பதில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு இருதரப்புக்குமிடையே கடைசியாக எழுந்துள்ள பிரச்சினை என்று திரு கானமயில்நாதன் கூறினார்.

சுனாமியை அடுத்து தென்னிலங்கையிலிருந்து சிங்கள மக்கள் வடபகுதியிலுள்ள தமிழ் மக்களுக்கு நிவாரண உதவிகளை அனுப்பியது போன்ற நல்லெண்ண நடவடிக்கைகளை பார்த்தபோது நிலைமையில் முன்னேற்றம் ஏற்படக்கூடும் என்று தாம் நம்பிய போதிலும் அரசியல் தலையீடுகளால் மீண்டும் சந்தேகங்களே தலைதூக்கி உள்ளன என்று திரு கானமயில்நாதன் விசனம் தெரிவித்தார்.

சுனாமியை அடுத்து எழுந்துள்ள பதட்ட நிலைமையை தளர்த்தும் முயற்சியில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம், வெளிநாட்டு நிவாரண உதவிகளை விநியோகிப்பதற்கு இருதரப்பினருக்கும் ஏற்புடைய திட்டமொன்றை தயாரிக்கும் வரை விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து செயல்பட விருப்பம் தெரிவித்துள்ளது.

தற்போது, சுனாமிக்குப் பின்னான புனர்நிர்மாணப் பணிகளில், இணைந்து செயல்படுவது பற்றியே கவனம் செலுத்தப்படுகிறது என்று இலங்கை ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் ஐபிஎஸ்ஸிடம் கூறினார். புனர்நிர்மாணப் பணிகளில் பங்குபற்றுமாறு கோரி அரசாங்கம் விடுதலைப்புலகளுக்கு எழுத்து மூலம் அழைப்பு விடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் முக்கால்வாசியை காவுகொண்ட டிசம்பர் 26 சுனாமியினால் 38,000 பேர் பலியானதுடன் மேலும் 800,000 பேர் இடம்பெயர்ந்தார்கள். தெற்கு, தென்கிழக்காசிய பிராந்தியத்தில் மொத்தம் 220,000 பேரை பலிகொண்ட சுனாமியினால் மோசமாக பாதிக்கப்பட்ட 12 நாடுகளில் இந்து சமுத்திர நாடான இலங்கை இரண்டாமிடத்தை வகிக்கிறது.

ஒருசில நிமிடங்களுக்குள் இலங்கையை தாக்கிய ஆழிப் பேரலைகளால் உயிரிழந்தோர் தொகை, இந்நாட்டின் இரண்டு தசாப்தகால யுத்தம் பலிகொண்ட தொகையான 64,000 த்தின் அரைவாசிக்கும் அதிகமானதாகும்.

மற்றுமொரு கவலைக்குரிய விடயம், அரசுக்கும் புலிகளுக்குமிடையே ஆறு சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அதிலிருந்து விலகியதை அடுத்து கடந்த 22 மாதங்களாக பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுள்ளமையாகும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுள்ளதால் யுத்தநிறுத்தம் மீறப்படும் ஆபத்தும் உறுதியற்ற தன்மையும் தோன்றி உள்ளன என்று இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்றுப் ஹோக்லன்ட் ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமைக்கு ஒரு காரணம் யுத்தநிறுத்த மீறல்களே என்று இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இடைத்தரகராக பணியாற்றும் நோர்வே உட்பட ஐந்து நோர்டிக் நாடுகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் தனித் தமிழீழ ராஜ்யத்தை ஏற்படுத்த போராடிவந்த விடுதலைப்புலிகளே கூடுதல் வன்முறைகளை புரிந்துள்ளார்கள். 2004ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகள் 2,636 யுத்தநிறுத்த மீறல்களையும் அரசாங்கம் 115 யுத்தநிறுத்த மீறல்களையும் புரிந்துள்ளதாக கண்காணிப்புக் குழு அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் முதல் இரண்டு வருட காலத்தில் விடுதலைப்புலிகள் புரிந்த வன்செயல்களிலும் பார்க்க இது மிகவும் அதிகமானதாகும். 2003இல் புலிகள் 784 வன்முறைகளிலும் அரசாங்கம் 42 வன்முறைகளிலும் 2002இல் புலிகள் 763 வன்முறைகளிலும் அரசாங்கம் 46 வன்முறைகளிலும் ஈடுபட்டதாக கண்காணிப்புக் குழு மேலும் தெரிவித்துள்ளது.

மேலும், வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் சிவிலியன்கள் குறிப்பாக சிறுவர்களே இந்த வன்முறைகளால் அதிகம் பாதிக்கப்பட்டார்கள். விடுதலைப்புலிகள் சிறுவர்களை போராளிகளாக சேர்த்துள்ளனர். வயது வந்தவர்களை கடத்திச் சென்றதுடன் உள்ளூர் மக்களை துன்புறுத்தியும் உள்ளனர். உதாரணமாக, கடந்த வருடம், 1490 சிறுவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகவும் வயதுவந்தவர்களில் 393 பேர் கடத்திச் செல்லப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

இதேவேளை, யுத்தநிறுத்தம் அமுல் செய்யப்பட்டதிலிருந்து அரசாங்க படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே பாரிய மோதல்கள் எதுவும் இடம்பெறாதிருப்பதால் இக்கட்டான சந்தர்ப்பங்களில் எல்லாம் போராளிகளும் இராணுவத்தினரும் அமைதிகாத்து வந்துள்ளதையும் திரு ஹோக்லன்ட் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்ஸிற்கு தலைமை தாங்கும் அரசியல்வாதியான ரவுப் ஹக்கிம் கருத்து தெரிவிக்கையில், மோதலுக்குத் திரும்பாமல் அமைதி பேணவேண்டுமென்ற பொது உணர்வே போரிடும் இரு தரப்பையும் கட்டுப்பாட்டுடன் இருக்கச் செய்வதற்கான முக்கிய காரணி என்று ஐபிஎஸ்ஸிடம் கூறினார்.

விடுதலைப்புலிகளும் யுத்தநிறுத்த காலத்தை தங்கள் அரசியல் இலாபத்திற்கு பயன்படுத்தி உள்ளார்கள் என்றும் ஹக்கிம் கூறினார். அரசாங்கத்தை கொண்டிராத செயற்பாட்டாளர் என்ற வகையில் புலிகள் குறிப்பிடத்தக்க அளவிலான சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுள்ளனர் என்று அவர் கூறினார்.

யுத்தநிறுத்தத்தை நீடிப்பதில் போர் கணிப்பீடுகளும் உதவிபுரிந்துள்ளன என்று கொழும்பில் தலைமை அலுவலகத்தை கொண்டுள்ள மாற்றுக் கொள்கை நிலையத்தின் சமாதான-யுத்த பகுப்பாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் கேதீஸ்வரன் லோகநாதன் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபோது எந்தத் தரப்பினருமே ஆதிக்கம் செலுத்த முடியாத வகையில் இராணுவ சமபலம் காணப்பட்டது என்று திரு லோகநாதன் தெரிவித்தார். உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்களில் இராணுவ பலம் புலிகளுக்கு சாதகமாகத் திரும்பியது. ஆனால் கடந்த வருடம் கிழக்கில் விடுதலைப்புலி தளபதிகளுக்கிடையே பிளவு ஏற்பட்டதை அடுத்து அரசாங்கம் இராணுவ பலம் கொண்டுள்ளதாக காணப்படுகிறது என்றும் இவர் கூறினார்.

எவ்வாறாயினும், தற்போதய நிலை குறித்து விடுதலைப்புலிகள் இந்தவாரம் வெளியிட்டுள்ள கருத்து உண்மையாயின் உதயன் பிரதம ஆசிரியர் கானமயில்நாதனின் கவலைக்கு காரணமுண்டு. அதாவது, புலிகளின் அரசியல்துறை தலைவர் சு.ப. தமிழ்செல்வன் ஊடகவியலாளர் மத்தியில் பேசியபோது, ‘எவ்வளவு காலத்திற்கு யுத்தநிறுத்தத்தை எங்களால் பேணமுடியுமென கூறமுடியாதிருக்கிறது’ என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கிழக்குப் பிராந்திய தலைவர் ஈ.கௌசல்யன் இந்த மாதம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் வைத்து படுகொலை செய்யப்பட்டமை குறித்து புலிகளுக்கு ஏற்பட்டுள்ள கோபமே இந்த எச்சரிக்கைக்கு காரணமாகும். இலங்கை அரசாங்கம் தங்கள் மீது தொடுத்துள்ள நிழல் யுத்தமே கௌசல்யன் கொலைக்கு காரணம் என்று புலிகள் கருதுகிறார்கள்.

யாழ்ப்பாண நகரின் அங்கிளிக்கன் மதகுரு செல்லையா நேசகுமார் அடிகளார் போன்ற நீண்டகால யாழ்ப்பாணவாசிகளைப் பொறுத்தவகையில் சுனாமிக்குப் பின்னரான பதட்டம் ஒரு பழக்கப்பட்ட நிலையாகும். சுனாமிக்கு முன்னர், புலிகள் மீண்டும் யுத்திற்கு திரும்புவார்கள் என்ற அச்சம் காணப்பட்டதாக நேசகுமார் அடிகளார் ஐபிஎஸ்ஸிடம் தெரிவித்தார்.

யுத்தநிறுத்தம் இருந்தால் மட்டும் சமாதானத்தை கொண்டுவந்துவிட முடியாது என்று அடிகளார் கூறினார். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் வரை யாழ்ப்பாண மக்களுக்கு மனநிம்மதி ஏற்படப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.(END/IPS/Copyright)